# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.15 (L.W.20)

| | | | |
|---|---|---|---|
| Name | : Palani | Caste | : S.C. |
| Father's Name | : கண்ணன் | Calling | : கூலி |
| Village | : குச்சிபாளையம் | Religion | : இந்து |
| Taluk | : அணைக்கட்டு | Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2025.

(A2 to A5 present, A1 and A6 absent and their absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசிக்கிறேன். நான் புகார் கொடுக்கும்போது இருந்த ஆய்வாளர் பிரேம்ராஜ் அவர்களை எனக்கு தெரியும். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. மற்ற 2 முதல் 5 எதிரிகள் ஆஜரானார்கள். அவர்கள் யாரையும் எனக்கு தெரியாது. பவித்ரா என்னுடைய அக்கா மகள். எனக்கு வயது சுமார் 50 ஆகிறது. என்னுடைய மனைவிக்கு 34 வயதாகிறது. எனக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. அவளுக்கு 13 வயதாகிறது. என்னுடைய அக்கா கண்ணமங்கலம் கீழ்பள்ளிப்பட்டில் வசிக்கிறார்.

என்னுடைய அக்கா மகளை நான் திருமணம் செய்துக்கொண்டேன். எங்கள் வீட்டில் கஷ்டம் இருந்ததால் திருமணம் முடிந்து 3 வருடம் கழித்து என் மனைவியை ஷீ கம்பெனிக்கு வேலைக்கு அனுப்பினேன். என் பக்கத்து வீட்டுக்காரர் கல்பனாவுடன் வேலைக்கு போவார்.

என் மனைவி வேலைக்கு போய்விட்டு வீட்டிற்கு வருவார். என் அண்ணன் சூரியபிரகாஷ் இடம் கல்பனா என்பவர் வந்து, பவித்ரா ஓவரா பண்ணுகிறது என்று என் அண்ணன் சூரியபிரகாஷிடம் சொல்லி உள்ளார். என் அண்ணன் என்னிடம் மேற்சொன்ன விவரத்தை கூறினார்.

நான், என் மனைவி பவித்ராவிடம் ஓவரா பண்ணுகிறாய் என்று சொல்கிறாங்க என்ன பிரச்சனை என்று நான் கேட்டேன். அகரம்சேரி டெல்டா ஷீ கம்பெனிக்கு என் மனைவியை வேலைக்கு அனுப்பினேன். மாமூலாக 10, 20 நாட்கள் வேலைக்கு போய்க்கொண்டு இருந்தது.

என் மனைவி பவித்ரா, கம்பெனியில் உள்ள Mat-ல் மாட்டி கீழே விழுந்துவிட்டதாக எனக்கு சொன்னாள். நான், என் மனைவியை வேலைக்கு வேண்டாம் என்று வீட்டிலேயே நிற்க வைத்துவிட்டேன். என் அம்மா என்னுடன் தான் இருக்கிறார்.

24.5.2015 அன்று நான் பள்ளிகொண்டாவிற்கு திருமணத்திற்கு சென்றுவிட்டேன். என் அம்மா, எனக்கு போன் செய்து, துணியெல்லாம் எடுத்துக்கொண்டு பவித்ரா வீட்டைவிட்டு போய்விட்டாள் சீக்கிரம் வா என்று சொன்னார். சொந்தகாரங்க இடத்தில் சுற்றி பார்த்தோம். எங்கும் வரவில்லை என்று சொன்னார்கள். 2 நாட்கள் தேடினோம் எங்கும் கிடைக்கவில்லை.

பின்னர் 26.5.2015 அன்று பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரின் ஒளிநகல் ஆவணம் இந்த வழக்கு கோப்பில் உள்ளது அ.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (ஒளிநகல் ஆவணம் என்பதால் அது எதிரிகளின் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது. அதன் நம்பகத்தன்மையை இறுதிவிசாரணையில் இருதரப்பிலும் வாதுரைக்கலாம்).

புகாரினை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் ரவி, உதவி ஆய்வாளர், பிரேம்ராஜ் இன்ஸ்பெக்டர் மற்றும் 2 போலிசார் இருந்தார்கள். நான் என் அக்கா, சொந்தக்காரங்க சென்றோம். வழக்கு போட்டு எனக்கு முதல் தகவல் அறிக்கையின் நகலை எனக்கு கொடுத்தார்கள்.

பின்னர் நான் என் அக்கா வீடான கண்ணமங்கலத்திற்கு சென்றுவிட்டேன். புகார் கொடுத்து 2 நாட்கள் கழித்து 28ம் தேதி பிற்பகல் 12 மணியிருக்கும்போது, என் அக்காவிற்கு போன் வந்தது. ஷமில்பாஷா என்பவர் என் அக்காவிற்கு போன் செய்தார். அந்த போனை வாங்கி யார் என்று நான் கேட்டேன். அதற்கு அவர், பவித்ராவை ரெயில் ஏற்றி அனுப்புகிறேன் நீங்கள் கூப்பிட்டு கொள்ளுங்கள் என்று சொன்னார்.

நான் அதற்கு ரெயில் ஏற்றவேண்டாம் பக்கத்தில் உள்ள காவல் நிலையத்தில் ஒப்படைக்கும்படி சொன்னேன். அவர் தனக்குகு டைம் கிடையாது என்றும், காட்பாடி இல்லையென்றால் ஆம்பூருக்கு ரெயில் நிலையத்திற்கு சென்று அழைத்து கொள்ளும்படி ஷமில்பாஷா சொன்னார்.

நாங்கள் ஆம்பூர், காட்பாடி, ஜோலார்பேட்டை ரயில் நிலையத்திற்கு சென்று பவித்ராவை தேடினோம். அவர் கிடைக்கவில்லை. பின்னர் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்தோம். போன் நெம்பர் கொடுத்தோம். இந்த நெம்பரில் இருந்து போன் வந்தது என்று சொன்னோம். ரிங் போட்டார் எடுக்கவில்லை. எங்களுடன் ஊர் தலைவர் வந்தார். அதன்பின்னர் காவல் ஆய்வாளரிடம் நெம்பர் கொடுத்தார். ஷமில்பாஷா, பவித்ராவை ரயில் ஏற்றி விட்டதாக காவல் ஆய்வாளர் பிரேம்ராஜிடம் சொன்னார்.

மறுநாள் அரியூர் காவல் நிலையத்தில் இருந்து, ஒரு பிணம் கிடப்பதாகவும் வந்து பார்க்கும்படி எஸ்.ஐ. ரவி என்பவர் எனக்கு போன் செய்தார். நாங்கள் போய் பார்த்து எங்கள் வீட்டு அம்மா இல்லை என்று சொன்னோம். நான், என் அண்ணன்,. அக்கா, மாமா ஆகியோர் சென்றோம். போன் நெம்பரை அரியூர் காவல் உதவி ஆய்வாளர் அவர்களிடம் கொடுத்தோம். இந்த நெம்பரில் இருந்து பேசினார்கள், அந்த முகவரியை கண்டுபிடித்து கொடுக்கும்படி சொன்னோம். ஆம்பூரில் ஷமில்பாஷா அங்கு தான் டவர் காண்பிக்கிறது அங்கு போய் பாருங்கள் என்று உதவி ஆய்வாளர் சொல்லி அனுப்பினார்.

நான், ஊர்க்காரர்கள், சொந்தக்காரர்கள் எல்லாம் வேனில் சென்று ஷமில்பாஷா வீட்டிடம் பார்த்தோம். ஷமில்பாஷா எனக்கு தெரியாது என்று சொன்னார். இல்லை என்று சொன்னார். பின்னர் ஆம்பூர் காவல் நிலையம் சென்றோம்.

அ.சா.ஆ.14 ல் உள்ள 7 வது தாளில் உள்ள ஷமில்பாஷா மற்றும் 8 தாளில் உள்ள இன்ஸ்பெக்டர் மார்ட்டின் பிரேம்ராஜ் ஆவார். சாட்சி அந்த 2 ஒளிநகல் புகைப்படத்தை பார்த்து அடையாளம் காட்டினார்.

ஆம்பூர் காவல் நிலையத்திலிருந்து, எங்களை பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு அனுப்பிவிட்டார்கள். நாங்கள் பள்ளிகொண்டா காவல் நிலையம் வந்துவிட்டோம். அங்கு ஷமில்பாஷா, அவர் அப்பா, அம்மா ஆகியோரை பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். ஷமில்பாஷாவை விசாரிப்பதாக சொல்லி எங்களை அனுப்பிவிட்டார்கள்.

மறுநாள் பள்ளிகொண்டா காவல் நிலையம் வந்தோம். அங்கு ஷமில்பாஷா இருந்தார். அதன்பிறகு வரும்போது எழுதி வாங்கிக்கொண்டு ஷமில்பாஷாவை அனுப்பிவிட்டோம் என்று சொன்னார்கள்.

என் மனைவி காணாமல் போய் அடுத்த மாதம் 17 ம் தேதி பள்ளிகொண்டா காவல் நிலையம் சென்றோம். ஷமில்பாஷா இருந்தார். பவித்ராவை கண்டுபிடித்து தருகிறோம் என்று இன்ஸ்பெக்டர் சொன்னார். என் மனைவியை கண்டுபிடிக்காததால் நாங்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தோம்.

என் மனைவி சென்னையில் உள்ள ஆஸ்டலில் இருப்பதாக போலிசார் போன் செய்தார்கள். எல்லோரும் சென்றோம். என் மனைவி அங்கிருந்தாள். மறுநாள் வேப்பங்குப்பம் காவல் நிலையத்திற்கு என் மனைவியை அழைத்து வந்தார்கள்.

அங்கிருந்து அரியூர் ஆஸ்டலில் தங்க வைத்தார்கள். பின்னர் சென்னைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். பின்னர் என்னை விசாரணை செய்தார்கள். என் மனைவியை சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணை செய்து பின்னர் வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள்.

என்னிடம் காட்டப்படும் கு.வி.மு.ச. பிரிவு 164 வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. நீதிமன்றத்தில் நீதிபதி முன்பு நான் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்துக் கொண்டார்கள். நான் சொன்னபடி சரியாக இருந்தது. நான் கொடுத்த கு.வி.மு.ச. பிரிவு 164-ன்படியான வாக்குமூலம் அ.சா.ஆ.23 ஆகும்.

பின்னர் CBCID போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரவர்மன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.ரவி வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.பாலு வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரி தரப்பில் ஆஜராகி, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.20 18:25:27 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.16 (L.W.24)

| | | | |
|---|---|---|---|
| Name | : Srinivasan.C. | Caste | : SC |
| Father's Name | : Late.P.Chinnathambi | Calling | : Police |
| Village | : Kattarampalli | Religion | : Hindu |
| Taluk | : Ambur | Age | : 50 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2025.

(A2 to A5 present, A1 and A6 absent and their absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் 2 முதல் 5 எதிரிகளை சாட்சி பார்த்து அடையாளம் காட்டினார். இன்று ஆஜராகாத 1ம் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜ், 6ம் எதிரி சுரேஷ் ஆகியோர் இன்று ஆஜராகவில்லை. அவர்களை சாட்சி தெரியும் என்கிறார். காரணம் சாட்சி போலிசாக உள்ளார். பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இந்த வழக்கு சம்பவ காலத்தில் பணியாற்றி உள்ளார்.

நான் 2015ம் வருடம் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றினேன். அப்போது பள்ளிகொண்டா காவல் நிலைய காவல் ஆய்வாளர் மார்ட்டின் பிரேம்ராஜ் ஆவார். 12.06.2015ம் தேதி பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் அன்றாட பணிகளை செய்து வந்தேன்.

16.06.2015ம் தேதி மாலை 6 மணிக்கு நிலைய பாரா பொறுப்பில் பணிக்கு வந்தேன். ஆய்வாளர் மார்ட்டின் பிரேம்ராஜ் உடன் ஷமில் என்ற ஒரு நபர் உட்கார்ந்து இருந்தார். எங்களுடைய ரைட்டர் முத்துக்குமரன் மற்றும் General diary duty S.S.I. அவர்களிடம் கேட்டபோது காவல் ஆய்வாளர் விசாரணைக்காக வரவழைக்கப்பட்டவர் என்று சொன்னார்.

அதன்பிறகு நான் அன்று இரவு பாரா பணியை மேற்கொண்டேன். அன்று இரவு ஆய்வாளர் நிலையத்திற்கு வரவில்லை. உடனே நான் தனிப்பிரிவு சிறப்பு பிரிவு பாலா (எ) பாலசுப்பிரமணியம் மற்றும் General diary duty S.S.I. ரவி ஆகியோருடன், ஷமில் பாஷா அங்கிருந்தார்.

17.06.2015ம் தேதி காலை பள்ளிகொண்டாவை சேர்ந்த சுப்பிரமணி என்பவர் நிலையம் வந்து பள்ளிகொண்டா பாலாற்றில் ஆந்திரா பதிவு எண் கொண்ட பொலிரோ வாகனத்தில் யாரோ வந்திருக்கிறார்கள் என்று சொன்னார். நானும், நந்தகுமார், பிரிகேடர் மற்றும் Y.B.தீபக் என்பவரும் ஆய்வாளருக்கு போன் மூலம் தகவல் சொல்லிவிட்டு, அங்கு கண்காணிக்க காலை 8.10 மணிக்கு சென்றுவிட்டோம்.

நாங்கள் பள்ளிகொண்டா ஆற்றிடம் சென்றபோது அங்கிருந்தவர்கள் ஓடிவிட்டார்கள். அருணாச்சலம் என்பவர் எங்களிடம் பொலிரோ வாகனத்துடன் சிக்கிக்கொண்டார். அங்கிருந்து ஆய்வாளருக்கு போன் மூலம் தகவல் சொன்னோம். 10 நிமிடத்தில் ஆய்வாளர் அங்கு வந்தார். அவருடன் மணிகண்டன், டிரைவரும் வந்தார்.

நானும், தீபக், நந்தகுமார் 3 பேரும் மேற்படி அருணாச்சலம் மற்றும் வாகனத்தையும் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு கொண்டு வந்தோம். நான் பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து பள்ளிகொண்டா பாலாற்றிற்கு தீபக் என்பவருடன் இருசக்கர வாகனத்தில் சென்றேன்.

பொலிரோ வாகனத்தையும், அருணாச்சலத்தையும் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு, ரைட்டரிடம் சொல்லிவிட்டு நான் பகலில் ஓய்வுக்கு சென்றுவிட்டேன்.

17ம் தேதி மீண்டும் நிலைய பாரா பொறுப்பில் மாலை 6 மணிக்கு வந்தபோது ரைட்டர் முத்துகுமாரிடம், General diary duty S.S.I. ரவியிடம், அருணாச்சலம் மற்றும் அவருடைய வாகனம் என்ன ஆனது என்று கேட்டேன். ஷமில்பாஷா 16ம் தேதி காவல் நிலையத்தில் இருந்தார். அவர் பற்றி என்ன ஆனது என்று மேற்படி ரவியிடம் கேட்டேன்.

அப்போது காவல் நிலைய ஆய்வாளர் மார்ட்டின் பிரேம்ராஜ், ஷமில்பாஷாவை 17ம் தேதி மாலை 4 மணிக்கு வெளியே அழைத்து போனதாக சொன்னார்கள். அருணாச்சலம் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் மாலை இருந்தார்.

அன்று இரவு நான் பாரா பணியை மேற்கொண்டபோது இரவு 10.30 மணிக்கு அருணாச்சலம் காவல் நிலையத்தில் இருந்தபோது அவரை ஆய்வாளர் அழைத்து வரச்சொன்னதாக சொல்லி 2ம் எதிரி ஐயப்பன் மற்றும் 6ம் எதிரி சுரேஷ் ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் அருணாச்சலத்தை அழைத்து சென்றார்கள்.

நான் கேட்டபோது ஆய்வாளர் அழைத்து வரச்சொன்னதாக சொன்னார். எங்கு சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. பின்னர் பாரா டியூட்டி முடிந்து காலை 8 மணிக்கு நான் ஓய்விற்கு சென்றுவிட்டேன். நான் பாராவில் இருந்தவரை ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வரவில்லை.

18.06.2015 ம் தேதி காலை 8 மணி வரை நான் காவல் நிலையத்தில் இருந்தபோது ஷமில் பாஷாவையும், அருணாச்சலத்தையும் காவல் நிலையத்திற்கு அழைத்து வரவில்லை. ஓய்வு முடிந்து 18.06.2015 ம் தேதி மாலை 6 மணிக்கு நான் காவல் நிலையத்திற்கு வந்தேன். 18.06.2015 ம் தேதி இரவு பொதுஜனங்கள் யாரும் இல்லை. காவல் நிலையத்தில் நாங்கள் மட்டும் பணி பார்த்தோம்.

19.06.2015 ம் தேதி காலை 9 மணிக்கு நான் ரோந்து பணி, பீட்டு பணி பாரத்துவிட்டு காலை 9, 9.30 மணியளவில் நிலையம் ஆஜரானேன். அப்போது ஷமில்பாஷா பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருந்தார். அவரை General diary duty S.S.I. ரவி அவர்களும், பாரா காவலர் அனுமந்தன் ஆகியோர்கள் ஷமில்பாஷாவை பயிண்ட் ஓவர் செய்து அனுப்பினார்கள். ஷமில் பாஷாவுடன் அவருடைய மாமனார் கௌஸ்பாஷா உடனிருந்தார். அருணாச்சலம் 19.06.2015 ம் அன்று காவல் நிலையத்திற்கு வரவில்லை.

ஷமில்பாஷாவின் ஒளிநகல் புகைப்படத்தை பார்த்தால் நான் அடையாளம் காட்டுவேன். அ.சா.ஆ.14 ல் உள்ள 7 வது தாளில் உள்ள ஒளிநகல் போட்டோவை பார்த்து அவர்தான் ஷமில் பாஷா என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார். (ஒளிநகல் ஆவணம் என்பதால் அது

எதிரிகளின் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது. அதன் நம்பகத்தன்மையை இறுதிவிசாரணையில் இருதரப்பிலும் வாதுரைக்கலாம்).

பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் நான் 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் இரவு பாரா பணி பார்த்தற்குண்டான ஆவண எண்.36, பக்கம் எண்.65 மற்றும் 66-ல் நான் பாரா புத்தகத்தில் கையொப்பம் செய்துள்ளேன். அது அ.சா.ஆ.24 ஆகும்.

அதன்பிறகு ஷமில் பாஷா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னிட்டு சென்னை மருத்துவமனையில் 26.06.2015 அன்று ஷமில்பாஷா இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன். அதுசம்மந்தமாக 27.06.2015 அன்று ஆம்பூரில் ஷமில் பாஷா இறந்தது சம்மந்தமாக முகமதியர் நபர்கள் போராட்டம் செய்தார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக என்னை CBCID போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரவர்மன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.ரவி வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.பாலு வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரி தரப்பில் ஆஜராகி, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.20 18:25:51 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.17 (L.W.25)

| | | | |
|---|---|---|---|
| Name | : Muthukumaran | Caste | : MBC Vanniyar |
| Father's Name | : K.Kannamani | Calling | : SSI-2394 |
| Village | : Seevoor Village | Religion | : Hindu |
| Taluk | : Gudiyattam Taluk | Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2025.

(A2 to A5 present, A1 and A6 absent and their absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலூர் மாவட்டத்தில் சிறப்பு பிரிவு குற்றப்புலனாய்வு துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். ஆஜர் 2 முதல் 5 எதிரிகளை தெரியும். 6ம் எதிரி இன்று நீதிமன்றம் ஆஜராகவில்லை. அவரை ஏற்கனவே பார்த்திருக்கிறேன். 6ம் எதிரி சிறப்பு பணியில் இருந்தபோது பணி சம்மந்தமாக நான் அவரை பார்த்துள்ளேன்.

13.10.2014 லிருந்து பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். அப்போது பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் ஆய்வாளராக திரு.மார்ட்டின் பிரேம்ராஜ் என்பவர் இருந்தார். அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவரை தெரியும். சம்பவ காலத்தில் அவர் ஆய்வாளராக பணியாற்ற, நான் தலைமை காவலராக பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் பணியாற்றினேன்.

16.06.2015ம் தேதி இந்த வழக்கு சம்மந்தமாக மாலை 3 மணியிலிருந்து 4 மணிக்குள் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.ரவி அவர்கள் ஒரு வழக்கு சம்மந்தமாக ஒரு நபரை விசாரித்துக் கொண்டிருந்தார்.

நான், ரவி அவர்களிடம் யாரை விசாரித்துக் கொண்டுள்ளீர்கள் என்று கேட்டேன். அவர் பள்ளிகொண்டா கா.நி. கு.எண்.140/2015 Woman missing சம்மந்தபட்டவரான ஷமில் பாஷா என்ற நபரை விசாரித்துக் கொண்டிருப்பதாக சொன்னார்.

அப்போது ஷமில் பாஷா காவல் நிலையத்தில் இருந்தார். அவரை நான் பார்த்தேன். ஷமில் பாஷாவின் போட்டோ இருந்தால் அடையாளம் காட்டுவேன். வழக்கு கோப்பில் அ.சா.ஆ.14ல் 7வது தாளில் உள்ள போட்டோவை பார்த்து சாட்சி அடையாளம் காட்டினார். (ஒளிநகல் ஆவணம் என்பதால் அது எதிரிகளின் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது. அதன் நம்பகத்தன்மையை இறுதிவிசாரணையில் இருதரப்பிலும் வாதுரைக்கலாம்).

அன்று இரவு 8 மணி வரை ஷமில் பாஷா காவல் நிலையத்தில் இருந்தார். நான் திரு.ரவியிடம் ஏன் அவரை காவல் நிலையத்தில் வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஆய்வாளர் வந்து விசாரணை செய்வார் என்று சொன்னார்.

அப்போது ஆய்வாளர் ஆம்பூரில் செம்மரக்கடத்தல் வழக்கு சம்மந்தமாக விசாரணை மேற்கொள்வதற்கு காவல்துறைக்கு உதவியாக இருந்தார்.

அன்று நான் இரவு 8.30 மணி வரை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருந்தபோது ஆய்வாளர் அவர்கள் வரவில்லை. அன்று இரவு ஷமில் பாஷாவிற்கு நான் உணவு வாங்கி கொடுத்தேன். பின்னர் இரவு 8.30 மணிக்கு நான் ஓய்விற்காக வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

அன்று இரவு பாரா காவலராக அ.சா.16 சீனிவாசன் இருந்தார். பொதுநாட்குறிப்பு பணியாக எஸ்.எஸ்.ஐ. ரவி இருந்தார். 17.06.2015 அன்று நான் காவல் நிலையத்திற்கு பணிக்கு வந்தேன். அப்போது ஷமில் பாஷா காவல் நிலையத்தில் இருந்தார். நான், திரு.ரவி சிறப்பு உதவி ஆய்வாளரை கேட்டபோது காவல் ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வரவில்லை என்றும், ஷமில் பாஷாவை விசாரிக்க காவல் நிலையத்தில் வைத்திருப்பதாக சொன்னார்.

அப்போது காலை 8.30 மணிக்கு பள்ளிகொண்டா ரங்கநாதர் கோவில் பக்கத்தில் உள்ள பாலாற்றில் பொலிரோ வாகனம் இருப்பதாகவும், அங்கு 4 நபர்கள் இருப்பதாக சந்தேகப்பட்டு தகவல் வந்தது. த.கா. ந்நதகுமாரையும், காவலர் சீனிவாசனையும் அனுப்பி என்னவென்று பாருங்கள் என்று சொன்னோம். அப்போது நின்றிருந்த நால்வரில் 3 நபர்கள் ஓடிவிட்டதாகவும், பொலிரோ வாகனத்தையும், அருணாச்சலத்தையும் மட்டும் அழைத்து வந்தார்கள். காவல் நிலையத்தில் ஷமில் பாஷாவும், அருணாச்சலமும் இருந்தார்.

பின்னர் காலை 9 மணிக்கு ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வந்தார். ஆய்வாளர், மேற்படி ஷமில் பாஷாவையும், அருணாச்சலத்தையும் தனி அறையில் வைத்து விசாரித்தார். நான்

வேறு ஒரு அறையில் என்னுடைய எழுத்தர் பணியை பார்த்தேன். என்ன விசாரித்தார்கள் என்று தெரியாது.

பின்னர் காலை 10 மணியளவில் ஆய்வாளர் அவருக்கு காவல் நிலைய வேறு பணி உள்ளது என்றும், அந்த 2 நபர்களை காவல் நிலையத்தில் இருக்க சொல்லி சென்றார். ஷமில் பாஷா, அருணாச்சலம் காவல் நிலையத்தில் இருந்தனர்.

மாலை 3 மணிக்கு ஆய்வாளர் காவல் நிலையம் வந்தார். ஷமில் பாஷாவை மட்டும் ஆய்வாளர் தனியாக விசாரித்தார். மாலை 4 மணிக்கு ஆய்வாளர், ஷமில் பாஷாவை தன்னுடைய அரசு வாகனத்தில் வெளியே அழைதது சென்றார். ஓட்டுனர் மணிகண்டன் வாகனம் ஓட்டினார். எங்கு அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. அவர்களும் தகவல் சொல்லவில்லை.

அப்போது அருணாச்சலம் காவல் நிலையத்தில் இருந்தார். ஆய்வாளருடன், ஆம்பூரில் இருந்து வந்த குற்றப்பிரிவு காவலர்கள் சபாரத்தினம், ஐயப்பன், நாகராஜ், முரளி ஆகியோர்கள் ஆய்வாளருடன் சென்றார்கள். நான்கு குற்றப்பிரிவு காவலர்கள் காவல் நிலையத்திற்கு வெளியே வண்டிற்கு அருகே நின்றிருந்தார்கள். வண்டி கிளம்பியது. வண்டி கிளம்பியதும் அவர்கள் காணவில்லை. எனவே அவர்கள் வண்டியில் கிளம்பியதாக நான் நினைத்தேன்.

நான் இரவு 8 மணி வரை காவல் நிலையத்தில் இருந்தேன். அருணாச்சலம் காவல் நிலையத்தில் இருந்தார். இரவு 8.30 மணிக்கு நான் ஓய்விற்கு வீட்டிற்கு சென்றுவிட்டேன். இரவு 8.30 மணிக்கு

நான் வீட்டிற்கு சென்ற பின்னர் அருணாச்சலத்தை அன்று இரவே பைண்ட் ஓவர் செய்வதாக சொன்னார்கள்.

18.06.2015 ம் தேதி காலை 8 மணிக்கு நான் நிலைய பணிக்கு வந்தேன். அப்போது காவல் நிலையத்தில் ஷமில் பாஷா, அருணாச்சலம் அங்கில்லை. 19.06.2015 ம் தேதி காலை 10 மணிக்கு காவல் ஆய்வாளர் மேற்படி பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்தார். ஷமில்பாஷாவும் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு வந்தார்.

அங்கிருந்த போலிஸ் அனுமந்தன் பாரா காவலர் மேற்படி ஷமில் பாஷா காவலர் குடியிருப்பில் இருந்து வந்ததாக சொன்னார். ஆய்வாளர் சொன்னதற்கு இணங்க பாரா காவலர், மற்றும் பொது நாட்குறிப்பேட்டு சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி அவர்கள் ஷமில் பாஷாவை பைண்ட் ஓவர் செய்து அனுப்பினார்கள். அப்போது ஷமில் பாஷா சாதாரணமாக இல்லாமல், சற்று சோர்வாக இருந்தார்.

அன்றே ஷமில் பாஷாவிற்கு உடம்பு சரியில்லை என்று ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததாக கேள்விப்பட்டேன். பின்னர் 22.06.2015 அன்று ஆய்வாளர் திரு.மார்ட்டின் பிரேம்ராஜ் வாணியம்பாடி மதுவிலக்கு அமுல் பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டார்.

26.06.2015 அன்று காவல் நிலையத்தில் இருந்தபோது நிலையத்திற்கு தொலைபேசி அழைப்பு வந்தது. அவர் 10 நிமிடத்திற்கு முன்பு காவல் நிலையத்திற்கு பேசியதாகவும், சென்னை மருத்துவமனையில் ஷமில் பாஷா இறந்துவிட்டதாக சொன்னார்.

அவர் யார் என்று தெரியாது. அந்த தகவலை காவல் நிலையத்தில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ரவி, மற்றொரு எஸ்.எஸ்.ஐ. சிங்காரம் அவர்களிடம் சொன்னேன். பின்னர் நான் ஓய்விற்காக வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

அன்று இரவு 12 மணியளவில் ஆம்பூர் டி.எஸ்.பி. கணேசன் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு ஷமில் பாஷா இறப்பு சம்மந்தமாக விசாரிக்க காவல் நிலையத்திற்கு வந்ததாக கேள்விப்பட்டேன்.

அன்று இரவே வழக்கு பதியப்பட்டது. கு.எண்.158/2015 வழக்கு பதிவு செய்யப்பட்டது. பிரிவுகள் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அதில் எதிரிகளாக மார்ட்டின் பிரேம்ராஜ் மற்றும் 6 நபர்களுக்கு எதிராக வழக்கு பதியப்பட்டதாக காலை நான் பணிக்கு வந்தபோது காவல் நிலையத்தில் இருந்த அதிகாரிகள் எனக்கு சொன்னார்கள். பின்னர் பிணக்கூராய்வுக்காக ஆவணம் தயாரிப்பதற்கு பொறுப்பு ஆய்வாளர் கோவிந்தசாமி, பாரா காவலர் அனுமந்தன் ஆகியோர் சென்றார்கள்.

28.06.2015 ம் தேதி இறந்து போன ஷமில் பாஷாவை ஆம்பூருக்கு வந்து அடக்கம் செய்ததாக கேள்விப்பட்டேன். 27.06.2015 ம் தேதி ஆம்பூரில் காலை 8 மணியில் இருந்து மாலை வரை கலவரம் நடந்தது. அப்போது நான் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் நான் பணியில் இருந்தேன்.

பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் நான் 16.06.2015, 17.06.2015, 18.06.2015 ஆகிய தேதிகளில் இரவு பாரா பணி பார்த்தற்குண்டான

ஆவண எண்.36, பக்கம் எண்.65 மற்றும் 66-ல் பாரா புத்தகத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன். அது அ.சா.ஆ.25 ஆகும்.

இவ்வழக்கு சம்மந்தமாக CBCID விஜய் ஆய்வாளர் மற்ற அதிகாரிகளும் விசாரித்தார்கள். நான் தெரிந்த விவரத்தை சொன்னேன்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரவர்மன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.ரவி வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.பாலு வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரி தரப்பில் ஆஜராகி, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.20 18:26:15 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.18 (L.W.27)

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிகண்டன் | Caste | : SC (A) |
| Father's Name | : Venkatesan | Calling | : Police |
| Village | : Karadikudi | Religion | : Hindu |
| Taluk | : Anaicut | Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2025.

(A2 to A5 present, A1 and A6 absent and their absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை மாவட்டம் தீவர குற்றவாளிகள் தடுப்பு பிரிவில் காவலராக பணியாற்றுகிறேன். ஆஜர் எதிரிகள் 2 முதல் 5 ஐ தெரியும். இன்று ஆஜராகாத 1ம் எதிரி திரு.மார்ட்டின் பிரேம்ராஜ் தெரியும். 1ம் எதிரி பள்ளிகொண்டா கா.நி. இருந்தபோது அவருடன் நான் பணிபுரிந்தேன். 6ம் எதிரி சுரேஷ் மற்றும் இறந்து போன எதிரி முனியனை சம்பவத்திற்கு முன்பு நான் பார்த்ததில்லை. பின்பு பார்த்துள்ளேன். சுரேஷ் special team வேலை பார்த்தபோது திருவண்ணாமலையில் இருந்து வந்தார்.

2014ல் youth brigadeல் நான் தேர்ச்சி பெற்று உமராபாத் காவல் நிலையத்தில் நான் பணிபுரிந்தேன். அது நிரந்தர பணியல்ல. அப்போது தொகுப்பு சம்பளம் ரூ.7500. ஜனவரி 2015 கடைசி வாக்கில் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் பிரிகேடர் பணிக்காக வந்தேன்.

அப்போது எனக்கு 4 சக்கர வாகனம் ஓட்ட உரிமம் இருந்தது. ஆனால் நன்றாக வண்டி ஓட்ட மாட்டேன். அப்போது ஆய்வாளர் திரு.மார்ட்டின் பிரேம்ராஜ் வண்டி ஓட்ட தயாராக இருந்தால் என்னை ஓட்டுனராக வைத்துக் கொள்வதாக சொன்னார்.

பின்னர் 1ம் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜக்கு நான் ஓட்டுனராக பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு சென்றேன். TN-23-G-0713 என்ற அலுவல் சார்ந்த வாகனத்தை நான் 1ம் எதிரி திரு.மார்ட்டின் பிரேம்ராஜ்க்கு ஓட்டுனராக பணியாற்றினேன். பரந்தாமன் டிரைவருக்கு என்னை ரிலிவர் டிரைவராக போட்டார்கள். அப்போது பரந்தாமனை மதுவிலக்கு பிரிவிற்கு பணிமாற்றுதல் சென்றதால் நான் 1ம் எதிரிக்கு ஓட்டுனராக சென்றேன். நான் மட்டும் வாகனம் ஓட்டினேன். பின்னர் எனக்கு ரிலிவராக நந்தகுமார் என்பவர் வந்தார்.

15.06.2015ம் தேதி அணைக்கட்டு காவல் நிலையத்திற்கு நானும், 1ம் எதிரி திரு.மார்ட்டின் பிரேம்ராஜ்-ம் சென்றோம். அன்று இரவு கந்தனேரியில் ஆடல் பாடல் நிகழ்ச்சி இருப்பதாக நாங்கள் சென்றோம். அன்று இரவு என்னை வீட்டிற்கு அனுப்பிவிட்டார். ஆய்வாளர் வண்டி ஓட்டிக்கொண்டு அவர் வீட்டிற்கு சென்றுவிட்டார்.

16.06.2015ம் தேதி நான் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு சென்றேன். ஆய்வாளர் வாகனத்துடன் காவல் நிலையத்திற்கு வந்தார். பின்னர் உத்தரவிற்கிணங்க நான் ஆய்வாளரை ஆம்பூர் டி.எஸ்.பி. அலுவலகத்திற்கு மேற்படி அலுவலகத்திற்கு அழைத்து சென்றேன்.

திரு.தங்கவேல் டி.எஸ்.பி. அவர்கள் செம்மரக்கடத்தல் வழக்கில் எதிரியாக இருந்ததால் அவரை கஸ்டடி வழக்கில் விசாரிப்பதாக இருந்தது. அவரை கஸ்டடியில் எடுத்து வேறொரு டி.எஸ்.பி. விசாரணை செய்தார். காவல் ஆய்வாளர் அவருக்கு உதவியாக இருந்தார்.

1ம் எதிரி திரு.மார்ட்டின் பிரேம்ராஜ் அவர்களை அந்த தங்கவேல் டி.எஸ்.பி. எதிரிக்கு shadow duty ஆக போட்டார்கள். அவருடன் எஸ்.எஸ்.ஐ. கலைசெல்வன், த.கா. அனுமந்தன் ஆகியோருடன் shadow duty போட்டார்கள். அந்த shadow duty இரவு 9 பணியிலிருந்து நள்ளிரவு 1.30 மணி வரையாகும். பின்னர் ஆய்வாளரை நான் காவலர் குடியிருப்பில் விட்டுவிட்டு நான் என்னுடைய வீடான கரடிகுப்பத்திற்கு சென்றுவிட்டேன்.

பின்னர் 17.06.2015 அன்று நான் காவல் நிலையத்திற்கு பணிக்கு வந்தேன். ஆய்வாளர் காவல் நிலையத்திற்கு வந்து அவருடன் காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார். நான் சென்றேன். நான் எங்கு போகவேண்டும் என்று கேட்டேன். நான் சொல்கிறேன், வண்டி எடு என்று சொன்னார். ஆய்வாளர் தான் வழியை காண்பித்தார். அவர் சொல்வது போல் வண்டியை ஓட்டினேன்.

பின்னர் பள்ளிகொண்டா ரங்கநாதர் கோவில் பின்புறம் பாலாற்றிடம் ஒரு பொலிரோ வாகனம் இருந்தது. அங்கு சென்றோம். அங்கு சீனிவாசன் காவலரும், அனுமந்தன் தலைமை காவலரும் அந்த ஆற்றங்கரையில் பொலிரோ வாகனத்துடன் அங்கிருந்தார்கள்.

பின்னர் ஆய்வாளர் பொலிரோ வாகனத்தை எடுத்துக் கொண்டு காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். அருணாச்சலத்தை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். காவல் நிலையத்திற்கு வந்தபோது காவல் நிலையத்தில் ஷமில் பாஷா என்பவர் இருந்தார். ஷமில் பாஷாவை காவல் நிலையத்தில் பார்த்தேன். அவரை பார்த்தால் அடையாளம் காட்ட இயலும்.

அ.சா.ஆ.14ல் 7ம் தாளில் உள்ள ஷமில்பாஷாவின் ஒளிநகல் புகைப்படத்தை காண்பித்து சாட்சி அயைாளம் காட்டினார். (அது ஒளிநகல் ஆவணம் என்பதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது. அதுகுறித்து இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம்).

மேற்படி காவல் நிலையத்தில், காவல் ஆய்வாளர் அருணாச்சலத்தையும், ஷமில்பாஷாவையும் விசாரித்தார். நான் பார்த்தேன். பின்னர் நான் சிற்றுண்டி அருந்திவிட்டு நிலையம் வந்த பின்னர் உத்தரவிற்கிணங்க ஆய்வாளரை நான் ஆம்பூர் டி.எஸ்.பி. அலுவலகத்திற்கு அழைத்து சென்றேன். அப்போது காவல் நிலையத்திற்கு வெளியில் பொது ஜனங்கள் இருந்தார்கள். அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது.

17.06.2015 அன்று காலை மேற்படி தங்கவேல் டிஎஸ்பி எதிரிக்கு, 1ம் எதிரி திரு.மார்ட்டின் பிரேம்ராஜ் shadow duty க்கு சென்றார். மதியம் மீண்டும் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு ஆய்வாளர் வந்தார். 17.6.2015 அன்று ஷமில் பாஷாவை ஆய்வாளர் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்.

அன்று மாலை 4 மணிக்கு ஷமில்பாஷாவையும், 2 முதல் 5 எதிரிகளையும் ஆய்வாளரையும் அழைத்துக்கொண்டு பள்ளிகொண்டா காவலர் குடியிருப்பிற்கு அழைத்து சென்று விட்டேன். அந்த வாகனத்தில் நான், ஆய்வாளர் திரு.மார்ட்டின் பிரேம்ராஜ், த.கா. ஐயப்பன், சபாரத்தினம், எஸ்.எஸ்.ஐ. நாகராஜ், த.கா, முரளி, காவலர், ஷமில் பாஷா ஆகியோர்களை அழைத்து சென்றேன்.

குடியிருப்பில் இறக்கிவிட்டு உத்தரவிற்கிணங்க நான் வண்டியில் இருந்த மைக்கை வாட்ச் செய்துக்கொண்டு இருந்தேன். பின்னர் எனக்கு வயிறு சரியில்லாததால் வாகனத்தை வீட்டிலேயே விட்டுவிட்டு பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு சென்றேன்.

பள்ளிகொண்டா காவல் நிலையமும், குடியிருப்பும் சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அங்கிருந்த தீபக் என்பவர் எங்கு இருந்து வருகிறாய் என்று கேட்டார். நான் போலிஸ் குடியிருப்பில் இருந்து வருவதாக சொன்னேன்.

பின்னர் இரவு 11 மணிக்கு நான் போலிஸ் நிலையத்திற்கு சென்றேன். வண்டியில் நான் படுத்துக் கொண்டு இருந்தேன். அன்று இரவு ஒரு மணியளவில் ஆய்வாளரும் அவருடன் இருந்த குற்றப்பிரிவு போலிசார் 4 பேரும் குடியாத்தத்திற்கு வாகனத்தை ஓட்ட சொன்னார்கள்.

அப்போது சுரேஷ் மற்றும் முனியன் போலிசாரும் அங்கிருந்தார்கள். அவர்கள் இருவரும் காவல் நிலையத்திலிருந்து எப்போது வந்தார்கள் என தெரியாது. அருணாச்சலத்தை காவலர் குடியிருப்பிற்கு எப்போது அழைத்து வந்தார்கள் என தெரியாது.

திருவண்ணாமலையில் இருந்து வந்த போலிசார் அருணாச்சலத்தை காவலர் குடியிருப்பிற்கு அழைத்து வந்ததாக சொன்னார்கள்.

அப்போது அருணாச்சலத்தை அழைத்துக் கொண்டு சித்தூர் மாவட்டம், பலமநேர்-க்கு அழைத்து சென்றோம். பலமநேரி காவல் நிலையத்திற்கு சென்றோம். பலமநேரி காவல் நிலையத்தில் 4, 5 எதிரிகளை போலிசார் கைது செய்து வைத்திருந்தார்கள்.

அவர்களை காட்டச்சொல்லி ஆய்வாளர் கேட்டபோது பலமநேரி காவல் நிலையத்தில் இருந்த காவலர் அவர்கள் ஆய்வாளர் உத்தரவு இல்லாமல் காவல் நிலையத்தில் இருந்த கைதிகளை காட்ட மாட்டேன் என்று சொன்னார். அதன்பின்னர் வேறு இடத்திற்கு சென்றோம். ஒரு நபரை காட்டினார். அவர் யார் என்று தெரியாது. அப்போது நான்தான் வண்டி ஓட்டினேன்.

பின்னர் வண்டியை மோர்தானா டேம்புக்கு ஓட்டினேன். விடியற்காலை மோர்தானா டேம்ப்க்கு சென்று சேர்ந்தோம். ஆய்வாளர் மற்றும் அவருடன் இருந்த காவலர்கள் மீன் வாங்கினார்கள். அங்கிருந்து காலை 8.30 மணிக்கு புறப்பட்டு, பள்ளிகொண்டா காவல் நிலையம் கிளம்பினோம்.

வரும்வழியில் மாற்றுவழி ஜங்ஷனில் என்னை இறக்கிவிட்டார். அவர் வாங்கி வந்த மீனை அவருடைய வீட்டில் என்னை சேர்க்கச் சொல்லி அனுப்பினார். நான் பஸ் பிடித்து அவர் வீட்டிற்கு சென்றேன். அவருடைய வீட்டில் மீனை சேர்த்துவிட்டு நான் தகவல் சொன்னேன். என்னை ஒருநாள் ரெஸ்ட் எடுக்க சொன்னார்.

19.06.2015ம் தேதி நான் ஆய்வாளருக்கு போன் செய்து, நான் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வேலை விஷயமாக செல்லவேண்டும் என்று கேட்டேன். அவர் எனக்கு அனுமதி கொடுத்தார். பின்னர் 20.06.2015ம் தேதி நான் மீண்டும் பணிக்கு வந்தேன். பின்னர் ஆய்வாளர் வேறு இடத்திற்கு பணிமாறுதலில் சென்றுவிட்டார்.

பின்னர் ஷமில் பாஷா செனனை மருத்துவமனையில் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். என்னை சி.பி.சி.ஐ.டி. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரவர்மன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.ரவி வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

5ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.பாலு வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரி தரப்பில் ஆஜராகி, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.20 18:26:50 +0530

# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.19 (L.W.29)

| | | | |
|---|---|---|---|
| Name | : நந்தகுமார் | Caste | : இந்து நாயுடு |
| Father's Name | : குப்புசாமி | Calling | : போலீஸ் |
| Village | : கொசவன் நகர் | Religion | : இந்து |
| Taluk | : K.V.குப்பம் | Age | : 54 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 20.01.2025.

(A2 to A5 present, A1 and A6 absent and their absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

**முதல் விசாரணை**

நான் தற்போது பேர்ணாம்பட்டு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருக்கிறேன். அயல்பணியாக மேல்பட்டி கா.நி. தனிப்பிரிவில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் 2 முதல் 5 எதிரிகளை தெரியும். இன்று ஆஜரில் இல்லாத 1ம் எதிரியை தெரியும்.

13.03.2015ம் தேதி அணைக்கட்டு காவல் நிலையத்தில் நான் பணியில் இருந்தபோது பள்ளிகொண்டா காவல் ஆய்வாளர் மார்ட்டின் பிரேம்ராஜ் அவருக்கு ஜீப் டிரைவராக வேலை செய்தேன். அவருக்கு கீழ் தான் நான் பணியாற்றினேன்.

16.06.2015 அன்று இரவு 8 மணிக்கு நான் பிரிகேடராக வேலை செய்து வந்தேன். என்னுடன் ஒய்.பி.ராஜேஷ்குமாரும் பணியில் இருந்தார். அன்று நான் பணி மாற்றும்போது முஸ்லீம் நபர் ஒருவர் இருந்தார். அவருடன் ரைட்டர் முத்துகுமார், எஸ்.ஏஸ்.ஐ. ரவி, பாரா காவலர் சீனிவாசன் ஆகியோர் இருந்தார்கள்.

அ.சா.ஆ.14ல் 7ம் தாளில் உள்ள ஷமில்பாஷாவின் ஒளிநகல் புகைப்படத்தை காண்பித்து சாட்சி அயைாளம் காட்டினார். (அது ஒளிநகல் ஆவணம் என்பதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது. அதுகுறித்து இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம்).

அவரை பவித்ரா காணாமல் போன வழக்கு சம்மந்தமாக அழைத்து வந்திருப்பதாக சொன்னார்கள். அவர் பெயர் ஷமில் பாஷா. அவருக்கு ரைட்டர் முத்துகுமார் டிபன் வாங்கி வரச்சொன்னதின்பேரில் நான் டிபன் வாங்கிக்கொடுத்தேன். வெளியில் பேருந்து நிலையத்தில் உள்ள தள்ளுவண்டியில் வாங்கி கொடுத்தேன். என்னுடன் ராஜேஷ்குமார் இருந்தார். நான் ரைட்டரிடம் சொல்லிவிட்டு வெளி பணிக்கு சென்றுவிட்டேன்.

17.06.2015ம் தேதி காலை 8 மணிக்கு டியுட்டி முடித்து நானும், ராஜேஷ்குமாரும் வந்தோம். அப்போது வெளியில் வந்த பாரா காவலர் சீனிவாசன் என்னுடன் பேசிக்கொண்டு இருந்தார். அப்போது பள்ளிகொண்டா ரங்கநாதர் கோவில் பின்புறம் ஆற்றங்கரையில் பொலிரோ வண்டியில் 5 நபர்கள் சந்தேகப்படும்படி இருப்பதாக சுப்ரமணி என்பவர் தகவல் சொன்னார்.

நானும், சீனிவாசனும் மேற்படி ஆற்றங்கரைக்கு சென்றோம். எங்களை பார்த்தவஹடன் 4 பேர் ஓடிவிட்டார்கள். ஒரு நபர் பிடிப்பட்டார். அவரை விசாரிக்கும்போது அவர் பெயர் அருணாச்சலம் என சொன்னார். அங்கிருந்து காவல் ஆய்வாளருக்கு போன் மூலம் தகவல் சொன்னார்.

அவரும், டிரைவர் மணிகண்டனும் ஜீப்பில் வந்தார்கள். அவரிடம் பொலிரோ வாகனத்தையும், அருணாச்சலத்தையும் ஒப்படைத்துவிட்டு டஎனக்கு டியுட்டி டைம் முடிந்துவிட்டதால் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

பின்னர் 17.06.2015 ம் தேதி இரவு பணிக்கு வந்தோம். பணி முடித்து பின்னர் 18.06.2015 ம் தேதி 8 மணிக்கு டியுட்டி மேற்கொண்டோம். 19.06.2015 ம் தேதி நான் பணிக்கு வரவில்லை. 20.06.2015 ம் தேதி பணிக்கு வந்தேன்.

18.06.2015 ம் தேதி இரவு பணி மாற்ற வந்தபோது, சிவானந்தத்தை கேட்டபோது வெட்டுவானத்தில் பணியில் இருப்பதாகவும், திருட்டு தனமாக மணல் கடத்த இருப்பதால் வெட்டுவானத்திற்கு சென்றதாக சொன்னார்.

இரவு 10 மணிக்கு ஆய்வாளர் போன் செய்து, குவார்ட்டர்சில் ஐயப்பனும், முரளியும் இருக்கிறார்கள் அவர்களுக்கு டிபன் வாங்கி கொடுங்கள் என்று சொன்னார். நான் டிபன் வாங்கி செல்லும்போது காவலர் குடியிருப்பின் வெளியில் ஐயப்பன் இருந்தார். டிபன் கொடுத்துவிட்டு பேசிக்கொண்டு இருக்கும்போது முரளி வந்தார். வீட்டிற்குள் ஒரு நபர் உட்கார்ந்து இருந்தார். வீட்டிற்குள் இருந்த நபர் ஷமில் பாஷா. நான் டிபன் கொடுத்துவிட்டு டியுட்டிக்கு சென்றுவிட்டேன்.

19.06.2015 ம் தேதி ஆய்வாளர் என்னை பணிக்கு வரவேண்டாம் என சொன்னார். 20.06.2015 ம் தேதி நான் காவல் நிலையத்திற்கு வரும்போது ஆய்வாளர் இருந்தார். வேறு யாரும் இல்லை. 19.06.2015 ம்

தேதி ஷமில் பாஷாவை மதியம் அவர் உறவினர்கள் மூலம் பயிண்டு ஓவர் செய்து அனுப்பியதாக தகவல் தெரிந்துக் கொண்டேன்.

19.06.2015 ம் தேதி ஷமில் பாஷா ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அட்மிட் ஆனதாக கேள்விப்பட்டேன். பின்னர் சென்னை அரசு மருத்துவமனையில் ஷமில் பாஷா இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன்.

01.07.2015 ம் தேதி CBCID போலிசார் ஷமில் பாஷா இறப்பு சம்மந்தமாக வழக்கு பதிவு செய்து, இரவு 10 மணிக்கு பள்ளிகொண்டா காவல் நிலையம் வந்து ஆய்வாளர் திரு.கருணாநிதி அவர்கள், பொறுப்பு ஆய்வாளர் வேப்பங்குப்பம் ஆய்வாளர் திரு.கோவிந்தசாமி அவர்கள் மற்றும் என்னுடன் பணியில் இருந்த 345 பரத் எங்கள் முன்னிலையில் 12 பதிவேடுகளை மகசரில் கைப்பற்றினார்கள். அதற்கு சாட்சியாக நானும், பரத்தும், காவல் ஆய்வாளர் கருணாநிதி மற்றும் ஆய்வாளர் கோவிந்தசாமி ஆகியோர்கள் கையொப்பம் போட்டோம். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.26 ஆகும்.

அந்த கைப்பற்றுதல் மகசரில் கண்ட 12 பதிவேடுகளான 29.04.2015 முதல் 01.07.2015 வரையிலான பள்ளிகொண்டா காவல் நிலைய பொது நாட்குறிப்பு அ.சா.ஆ.27.

பள்ளிகொண்டா காவல் நிலைய முதல் தகவல் அறிக்கை பொருளுடக்கம் கு.எண்.1/2015 முதல் 160/2015 வரையிலான அ.சா.ஆ.28.

பள்ளிகொண்டா காவல் நிலைய Sentry relief book 01.01.2015 முதல் 01.07.2015 அ.சா.ஆ.29.

பள்ளிகொண்டா காவல் நிலைய Rough duty roaster 15.06.2015 முதல் 02.07.2015 வரையிலான அ.சா.ஆ.30.

பள்ளிகொண்டா காவல் நிலைய Duty Roster January 2015 to June 2015 வரை அ.சா.ஆ.31.

பள்ளிகொண்டா காவல் நிலைய Nominal roll வரிசை எண்.1 முதல் 19 வரை அ.சா.ஆ.32.

பள்ளிகொண்டா காவல் நிலைய Prisoner Search Register Page No.1 to 69 நாள் 05.01.2015 முதல் 01.07.2015 வரை அ.சா.ஆ.33.

பள்ளிகொண்டா காவல் நிலைய Community Service Register Page No.1/2015 முதல் 106/2015 வரை அ.சா.ஆ.34.

பள்ளிகொண்டா காவல் நிலைய Inspector Daily Diary January 2015 முதல் April 2015 வரை அ.சா.ஆ.35.

பள்ளிகொண்டா காவல் நிலைய Medical memo book Sl.No.C06706012 C0670700 and B.No.8088701 to B.No.8088800 வரை அ.சா.ஆ.36.

பள்ளிகொண்டா காவல் நிலைய Crime No.140/2015 Woman missing-க்காக C.D. file photocopy அ.சா.ஆ.37. (அது ஒளிநகல் ஆவணம் என்பதால் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியிடப்படுகிறது. அதுகுறித்து இறுதி விசாரணையில் வாதுரைக்கலாம்).

பள்ளிகொண்டா காவல் நிலைய Hospital Intimation Register Page No.1/2015 to 249/2015 அ.சா.ஆ.38 ஆகிய பதிவேடுககளை மேற்படி கைப்பற்றுதல் மகசரில் CBCID போலிசார் கைப்பற்றினார்கள். அதில் நானும், பரத் காவலரும் கையெழுத்து போட்டோம். கைப்பற்றுதல் மகசரில் முதலாவதாக உள்ள கையொப்பம் பரத் உடையது தான். எனக்கு முன்பு தான் அவர் கையொப்பம் செய்தார். இவ்வழக்கு சம்மந்தமாக CBCID போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.மகேந்திரவர்மன் வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.ரவி வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரிகள் தரப்பில் ஆஜராகி, எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

திரு.பாலு வழக்கறிஞர் அவர்கள் மேற்படி எதிரி தரப்பில் ஆஜராகி, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்கிறார்.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.20 18:27:05 +0530